சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.

பு.சா.01 திரு. சதீஸ் த /பெ திரு. ஞானசேகரன் , வயது . 37

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை .–**

. 1. நான் எங்கு குடியிருந்து வருகிறேன் என்றால் சென்னையில் குடியிருந்து வருகிறேன். நான் கெவின் கியர் நிறுவனத்தில் மேலாளராக பணியாற்றி வருகிறேன். எதிரி எனக்கு எவ்வாறு பழக்கம் என்றால் அவர் என் உறவினர் ஆவார். எதிரி எனக்கு நன்கு அறிமுகமானவர் என்று குறிப்பிட்டுள்ள முறையில் எவ்வாறு தெரியும் என்றால் சிறு வயதில் இருந்து அவரை எனக்கு தெரியும் எதிரிக்கு பணம் கொடுக்குமாறு எனக்கு யாரேனும் சிபாரிசு செய்தார்களா என்றால் இல்லை எதிரி என்னிடம் பணம் கேட்டதால் பணம் கொடுத்தேன். நான் யார் முன்னிலையிலும் வைத்து பணம் கொடுக்கவில்லை என்றால் சரிதான். 04.04.2021 அன்றுஎதிரி என்னை நேரில் அணுகி பணத்தை கேட்டார். எதிரிக்கு நான் பணம் கொடுத்த போது அவரிடமிருந்து ஆவணங்கள் ஏதேனும் பெற்றுக் கொண்டேனா என்றால் இல்லை. பொதுவாக ஒரு நபருக்கு ரூபாய் ஒரு லட்சத்திற்கு மேல் பணம் கொடுத்தால் வங்கி மூலமாகத்தான் பண பரிவர்த்தனை செய்ய வேண்டும் என்றால் சரிதான். எதிரிக்கு நான் பணம் எவ்வாறு கொடுத்தேன் என்றால் ரொக்கமாக கொடுத்தேன்.

2. எனக்கு எதிரிக்கு பணம் கொடுப்பதற்கு எவ்வாறு வருமானம் வந்தது என்றால் நான் கடந்த 20 வருடமாக பணியாற்றுவதாலும் எனக்கு சொந்தமான ஒரு நிலத்தை விற்றதாலும் என்னிடத்தில் பணம் இருந்தது அந்த பணத்தை எதிரிக்கு கொடுத்தேன். நான் தற்போது கூறிய விவரங்களை எனது முதல் விசாரணை தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான். எதிரிக்கு நான் பணம் கொடுத்த சமயத்தில் அவர் கோழிப்பண்ணை வியாபாரமும், ஆச்சி மற்றும் கொக்கோகோலா விநியோசராகவும் இருந்தார். எனக்கும் எதிரிக்கும் உள்ள பரிவர்த்தனைக்கு நான் கணக்கு வழக்கு ஏதேனும் பராமரித்து வந்தேனா என்றால் இல்லை. எதிரிக்குத் தனது வியாபாரத்தில் போதிய வருமானம் உள்ளது என்றாலும் எனவே என்னிடம் பணம் வாங்க வேண்டிய அவசியம்

இல்லை என்றாலும் சரியல்ல. நான் எதிரிடம் பணம் ஏதும் பெற்று இருந்தேனா என்றால் இல்லை. எதிரி என்னிடம் 2015 வருடம் ரூபாய் 2 லட்சம் மட்டுமே கடனாக பெற்று இருந்தார் என்றாலும் அந்த பணத்தையும் வட்டியுடன் சேர்த்து முழுவதுமாக செலுத்தி விட்டார் என்றாலும் சரியல்ல.

3. அவ்வாறு எதிரி கடனை பெற்ற போது அதற்கு ஆதரவாக காசோலை கொடுத்தார் என்றாலும் அந்த காசோலையை நான் பூர்த்தி செய்து எதிரி மீது பொய்யாக இந்த வழக்கு தொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் கூறுவது போல் எதிரி என்னிடம் பணம் ஏதும் பெறவில்லை என்றாலும் அதன் பிறகு காசோலை ஏதும் 2024 ஆம் வருடம் கொடுக்கவில்லை என்றாலும் சரியல்ல. நான் எதிரிக்கு ரூபாய் 8 லட்சம் கொடுத்ததாக கூறுவது தவறானது என்றால் சரியல்ல.

Sd/-K.S.Dinesh.,B.A.,B.L.,(Hons)
Judicial Magistrate No.I,
Tirupattur.